அமைக்கப்பட்ட குழுவின் பரிசிலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஸ்ரீவில்லி புத்தூரில் ஒரு சப்-கோர்ட்டு நிறுவுவதற்கான பிரேரணை அரசின் பரிசிலனையில் உள்ளது.

(இ) இல்லை.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் செஷன்ஸ் கோர்ட் மதுரையில் இருக்கிறது. அதை இராமநாதபுரத்திற்கே மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: புதிய சப்-கோர்ட்டுகள், புதிய ஜில்லா முன்சிப் கோர்ட்டுகள் அமைக்க வரதராஜன்—டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறதே, அது தன்னுடைய இடைக்கால சிபார்சைக் கொடுத்திருக்கிறதா? இல்லையென்றால் அதன் அறிக்கை எப்போது கிடைக்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நீதி மன்றம் அமைப்பதற்காக அந்தக் குழு அமையவில்லை. இருக்கின்ற நீதிமன்றங்களின் அதிகார வரம்பை நிர்ணயிப்பதற்காகவும், எந்த இடத்தில் நீதி மன்றம் மேலும் தேவைப்படலாம் என்பதைக் கண்டறிவதற்காகவும் தான் அது அமைக்கப்பட்டது. அது எந்த விதமான இடைக்கால அறிக்கையையும் தரவில்லை.

Cases of Thali snatching in Thanjavur District

* 208 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of cases of gangs of men snatching "Thali" from the necks of married women have been reported from Thanjavur district around September 1970; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) குற்ற பரம்பரையைச் சேர்ந்த இரு குறவர் கூட்டத்தினர் ஒரு கூட்டத்தில் மூன்று பேரும் மற்றொன்றில் நான்கு பேரும் இருந்தனர். 1970-ல் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையிலும், அதைச் சுற்றியும் நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்ட தாலிகள் பறிக்கப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்பாளி யாவர். தாலிகள் அனைத்தும் மீட்கப்பட்டு, ஏழு குற்றவாளிகளும் தண்டிக் கப்பட்டனர்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இம்மாதிரி குற்றவாளிகள் தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்ல. மார்ச் மாதத்தில் மதுரை மாவட்டத்திலேயே மாதிரியான சம்பவம் நடந்து, அதுவும் குற்ற பரம்பரையினர் செயல்கள் என தெரிகிறது. ஆகவே இதுபோன்ற வேலைகளைச் செய்கிறவர்கள் யார், என்பதை எல்லா மாவட்டங்களிலும் விவரங்களைச் சேகரிக்க போலீஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

1971 ஜூலை 13]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல தஞ்சை மாவட்டத்தில் மட்டும் அல்ல பல்வேறு மாவட்டங்களில் இப்படிப்பட்ட குறவர் கூட்டத்தினர், 'கேப்மாரி' என்று சொல்லக்கூடிய கூட்டத்தினர் ஆகியவர்கள் இந்தக் குற்றங்களைச் செய்து வருகிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இளையான்குடியைச் சேர்ந்த 25 பேர்கள் தஞ்சை, திருச்சி, கோவை, சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களில் 1964-ஆம் ஆண்டில் இருந்து பெண்களின் நகைகளை பறிப்பதுபோன்ற குற்றங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு பத்துப்பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். 13 ஆயிரம் ரூபாய் பெறுமான நகைகள், சொத்துக்கள் மீட்கப்பட்டன. இதைப்போல பம்பு செட்டுகளைத் திருடுகிற கூட்டத்தினர் 9 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையினர் இதுபற்றி மிகுந்த கண்காணிப்போடுதான் முயற்சிகளைச் செய்கின்றனர்.

திரு. பெ. மலைச்சாமி : பெண்கள் அணியக்கூடிய தாலியைப் போல சில ஆண்கள் புலிப்பல் கட்டி அணிவதைத் தடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதை எந்தக் குறவர்களும் பறித்ததாக செய்தி வரவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சில ஆண்டுகளுக்கு முன்பு குற்றப் பரம்பரையினருக்கு 'அவுட் ஆப் பவுண்ட்ஸ்' என்று வைத்திருந்தார்கள். மீண்டும் அம்மாதிரி செய்ய ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏற்கெனவே எடுக்கப்பட்ட நடவடிக்கையினை ஆராய்ந்து மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையைப் பரிசீலிக்க வேண்டும்.

திரு. நா. வீராசாமி : இப்படிப்பட்டவர்கள் தாலியைத் திருடக்கூடிய நிலையில் ஒரு புதிய முயற்சியில் பிங்கர் டிப்ஸ்—கைரேகைகள் பதிவு கூடக் கிடைக்காத நிலையில் செயல்படுகிறார்களே, எந்த இடத்தில் இவர்களுக்கு இந்தப் பயிற்சி கொடுக்கப்படுகிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இவ்வளவு விவரங்கள் தெரிந்திருக்கும் உறுப்பினர் அதையும் தெரிந்துகொண்டிருந்தால் நல்லது.

திரு. எம். தேவராசன் : தாலி பறிக்கும் கூட்டத்தினரின் செயல் முறையை விளக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தச் செயல் முறையை விளக்கத் தேவையில்லை. அது விளக்கப்படுவதும் நல்லதல்ல.

பல்லடத்தில் துணைக்கருவூலம்

*209 வினா—**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடத்தில் சப்டிரஷரி ஆபீஸ் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று கோரி பொது மக்களிடமிருந்து விண்ணப்பம் ஒன்று அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளதா ?